**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : CC 671/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 14.11.2025.**

| Name : ராஜா | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused absent. Petition filed and allowed.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செலவடையில் குடியிருந்து மளிகை கடை நடத்தி வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்த இடத்திற்கு அருகில் ரோட்டிற்கு தெற்கே என் காட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது சத்தம் கேட்டு போய் பார்த்தேன். வயதான ஒரு நபர் அடிப்பட்டு கீழே கிடந்தார். மில் வண்டி ஒன்று சம்பவயிடத்தில் இருந்தது. எதிரி முகத்திற்கு மாஸ்க் அணிந்திருந்ததால் என்னால் அடையாளம் சொல்ல முடியவில்லை. தற்போது பார்த்தாலும் அடையாளம் சொல்ல முடியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) அடிப்பட்ட நபரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்து நடந்த சமயத்தில் தான் நான் அவரை பார்த்தேன். 21.06.2020ம் தேதி மாலை 4 மணியளவில் ஜலகண்டாபுரம் டூ தாரமங்கலம் ரோட்டில் மலையமரத்தான் பிரிவு

ராஜா கோவில் பாலம் அருகே ரோட்டின் இடது புறமாக அடிப்பட்ட நபர் நடந்து சென்ற போது அவருக்கு எதிர்திசையில் இருந்து வெப்படை பாரதி மில் வண்டி TN 34 V 8910 ஈச்சர் வண்டியின் ஓட்டுநரான ஆஜர் எதிரி வேகமாக ஓட்டி வந்து நடந்து சென்றவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை— இல்லை.

ஒம்/— தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : CC 671/2024**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : மாதேசன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செலவடையில் குடியிருந்து மின்சாரம் சம்மந்தமாக வேலை செய்கிறேன். இறந்தவர் என் சித்தப்பா. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 21.06.2020 ம் தேதி மாலை 5.30 மணிக்கு நான் மற்றும் மோகன்ராஜ் இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான ராஜா கோவில் பாலம் அருகே வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**